# விவாக விடுதலைகளும் அதன் தாக்கங்களும்: சம்மாந்துறை காதி நீதி வலயத்தை மையப்படுத்திய ஆய்வு

## The Impact of Divorce: A Study Based on Sammanthurai Quazi Court Zone

A.M.F.Sabeeha[1] S. Nathira Jahan[2] & A.M.M. Aaqil[3]

[123]இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிப்பீடம், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில்
habeesa67@gmail.com, mohammedaaqil1995@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

இன்று உலகில் மனிதனின் குடும்ப மற்றும் சமூக வாழ்வில் விவகாரத்தின் செல்வாக்கு மேலோங்கிக் காணப்படுகின்றது. பொதுவாக முஸ்லிம் சமூகத்தில் விவாகரத்தானது அதிகரித்த வண்ணமே காணப்படுகிறது. இஸ்லாம் அனுமதித்து வெறுத்த ஒரு விடயமாக இருந்த போதிலும் இதன் தாக்கம் இடம்பெற்ற வண்ணமே உள்ளது. விவாக பதிவுகள் இடம்பெறுகின்ற அதே சந்தர்ப்பத்தில் விவாக விடுதலைகளும் காதி நீதிமன்றங்களில் இடம்பெறுகின்றன. இதனால் எதிர்மறை விளைவுகள் சமூகத்தில் இடம் பெறுகின்றன. பொதுவாக பெண்கள், குழந்தைகள் அநாதரவாக்கப்படுகின்ற அதே நேரம், இதனை தொடர்ந்து ஒழுக்க சீரகேடுகளும் நிகழ்கின்றது. இவ்வாய்வானது சம்மாந்துறை காதி நீதிவலயத்தை மையப்படுத்திய ஆய்வாகும். இப்பிரதேசத்தில் முஸ்லிம் சமூகத்தில் அதிகம் விவாகரத்துகள் இடம் பெறுவதற்கான காரணங்கள் மற்றும் அதன் எதிர்மறையான விளைவுகளை கண்டறிந்து இவ்விடயத்தை இஸ்லாம் வழங்கிய வழிகாட்டல் மூலம் வழி நடாத்தி செல்வதற்கான வழி முறைகளை முன்வைக்கவே இவ்வாய்வு முனைகிறது. தரவு சேகரிப்பு முறையானது முதலாம் மற்றும் இரண்டாம் நிலை தரவுகள் இவ்வாய்விற்காக பயன்படுத்தப்பட்டுள்ளன. முதலாம் நிலை தரவுகளானது நேரடியாக காழி நீதிமன்றத்தில் மேற்கொள்ளப்பட்ட அவதானங்களாகவும் காழியுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலாகவும் அமைந்தன. இரண்டாம் நிலை தரவுகளாக புத்தகங்கள், சஞ்சிகைகள் ஆய்வுப்பத்தரிகைகள் பயன்படுத்தப்பட்டன. திருமணம் பற்றிய போதிய அறிவினை திருமணத்திற்கு முன்னர் இரு தரப்பினருக்கும் வழங்கல் மற்றும் சீதனத்தை இல்லாமல் செய்வதற்கு இளைஞர்கள் மத்தியில் இஸ்லாமிய வழிகாட்டல்களை இள வயதிலிருந்தே வழங்கி வருதல் போன்ற பெறுபேறுகள் முன்வைக்கப்பட்டன.

**திறவுச்சொற்கள்** : விவாகரத்துக்கள், முஸ்லிம், சமூகம், பாதிப்புக்கள்.

## அறிமுகம்

காலணித்துவ இலங்கையின் புகழ்பெற்ற முஸ்லிம் கிராமங்களுள் சம்மாந்துறை முக்கிய இடத்தினைப் பெறுகின்றது. கண்டி இராச்சியத்தின் பிரதான துறைமுகமாக சம்மாந்துறை காணப்பட்டதென D'oilyd தினக்குறிப்பு அமைவதனைக் காணலாம். அத்துடன் இப்பிரதேசமானது பண்மைத்துவ பண்புகளைக் கொண்ட பிரதேசமான வரலாற்றில் அடையாளப்படுத்தப்படுவதற்கு அங்கு வாழ்ந்த முஸ்லிம்,பறங்கியர், தமிழர், முக்குவர் ஆகிய இனக்குழுக்கள் காரணமாக அமைவதுடன் பெரும்பாண்மையினர் முஸ்லிம்களேயாவர். இப்பிரதேசமானது ஆரம்ப காலம் முதலேயே அன்றாட நடவடிக்கை செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான நிறுவன முறைமைகளைக் கொண்ட பிரதேசமாக

அடையாளப்படுத்தப்படுகின்றது. 1935ம் ஆண்டிற்கு முற்பட்ட காலப்பகுதியில் பிரதேச நிர்வாகத்திற்காக 'கிராமக்கோடு' எனப்பட்ட ஒரு நிறுவனத்தின் காத்திரமான சேவை பிரசேத்தின் சகல பிணக்குகளையும் முடிவுக்கு கொண்டு வர உத்தியோகபூர்வமாக பயன்பட்ட தெனலாம் (முஸ்தபா 2004). இவ்வகையில் முஸ்லிம் குடும்பங்களின் குடும்பப் பிணக்குகளை கையாளும் பணியையும் இக்கிராமக்கோடு மேற்கொண்டது. இதன்போது முஸ்லிம் பெண்கள் எதிர்கொண்ட அசௌகரியங்களை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பில் சிந்தனை செய்த சமூகப் பிரமுகர்களின் முயற்சியின் விளைவினால் 1935ம் முஸ்லிம் குடும்பப் பிணக்குகளை கையாளவென 'காதிக்கோடு' என அந்நாட்களில் வழங்கப்பட்ட இன்றைய காழி நீதிமன்றம் உருவாக்கப்பட்டது எனப்படுகின்றது. இற்றைக்கு சுமார் 84 வருடங்களாக இது இயங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது.

**இலக்கிய மீளாய்வு**

விவாக மற்றும் விவாகரத்தினால் ஏற்படுகின்ற பிரச்சினைகள் குறித்து பல ஆய்வுகள் கட்டுரைகள் என்பன பிரசுரிக்கப்பட்டுள்ளன.

அப்துல் நாசர் என்பவரால் (2016) தலாக் நிகழ்வது எதற்காக எனும் தலைப்பில் சமகாலத்தில் மணவிலக்கு இடம்பெறுவதற்கான காரணங்களையும் அதனை தவிர்ப்பதற்கான முன்மொழிவுகளையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

உஸ்தாத் ரசீத் ஹஜ்ஜுல் அக்பர்(2013) அவர்களால் பெண் நீதமும் நிதர்சனமும் மனவிளக்கு அளிக்கும் உரிமை தலாக் எனும் தலைப்பில் பெண்கள் தலாக் பெறும் உரிமை பற்றியும் அவர்கள் எதிர்நோக்கும் பாதிப்புக்கள் பற்றியும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

F. சம்ஹா, M. தாரிக், F. றுமானா என்பவர்களால்(2017) விவாகரத்து இடம்பெறுவதற்கான காரணங்களை கண்டறிதல் எனும் தலைப்பில் களுத்துறை மாவட்டத்தை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் போதைப்பொருள் பாவனை, சீதனப்பிரச்சினை, முறைதவறிய தொடர்பு, மார்க்க அறிவின்மை போன்ற பல காரணங்கள் விவாகரத்திற்கான முதன்மைக்காரணங்களாக முன்மொழியப்பட்டுள்ளன.

S.M இம்தியாஸ்(2013) என்பவரால் முஸ்லிம் சமூகத்தில் குடும்பவியல் நிலை எனும் தலைப்பில் தலாக் இடம்பெறுவதற்கான காரணங்கள் மற்றும் சம்பவங்கள் என்பவற்றை சுட்டிக்காட்டியுள்ளார்.

M.Y.F நூபியா, M.U.F அஷ்ரா, M.H ஹுஸ்னா, M.B.F நுஸ்கியா என்பவர்களால்(2018) இளம் வயதில் விவாகரத்து பெற்ற முஸ்லிம் குடும்பத்தலைவிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் எனும் தலைப்பில் ஆலம்குலம் மற்றும் சம்புநஹர் கிராமங்களை மையப்படுத்திய ஆய்வில் போதைவஸ்து, முறைதவறிய தொடர்பு காரணமாக பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை சுட்டிக்காட்டி அதற்கான ஆலோசனைகளையும் பரிந்துரைகளையும் முன்வைத்துள்ளனர்.

A.R ஆயிஸா பர்ஸானா, S.M.M மஸாஹிர்(2018) என்பவர்களால் விவாகரத்தின் பின்னர் முஸ்லிம் பெண்கள் எதிர்கொள்ளும் வாழ்வியல் சவால்களை சுட்டிக்காட்டி அதற்கான விதந்துரைகளை முன்வைத்துள்ளனர்.

அமீர் றுஸ்ஹானா, அஹமட் சர்ஜுன் ராஸிக்(2019) என்பவர்களால் விவாகரத்துப் பெறும் முஸ்லிம் பெண்கள் மத்தியில் ஏற்படுத்தும் தாக்கங்கள் எனும் தலைப்பில் அநுராதபுர மாவட்டத்தை மையப்படுத்திய ஆய்வில் முஸ்லிம் பெண்கள் விவாகரத்துக் கோருவதனால் ஏற்படும் பாதிப்புக்களை சுட்டிக்காட்டியுள்ளனர்.

**ஆய்வுப்பின்னனி**

அவ்வகையில் சம்மாந்துறை காழி நீதிமன்றின் பணிகளுள் ஒன்றான விவாக விடுதலையைக் கையாளல் தொடர்பிலான இவ்வரலாற்று பாரம்பரியம் கொண்ட நிறுவனம் மெச்சத்தக்கதாக அமைவதனை அவதானிக்க முடியுமான அதே சமயம் அங்கு பல்வேறு துறைகளையும் அவதானிக்க முடிகின்றது. திருமணத்திற்கான வழிகாட்டலை தெளிவாகவும் ஆணித்தரமாகவும் முன்வைப்பதுடன் விவாக விடுதலை தொடர்பில் வழிகாட்டுதல்களை வழங்கவும் தவறவில்லை. திருமணம் மனித வாழ்வை சீர்படுத்தவும்இ சந்ததி விருத்திக்கும்இ மனித உணர்வுகளை சீர்படுத்தவும் அறிமுகப்படுத்தப்பட்டது. 'நிக்காஹ்' அல்லது 'அஸ்ஸவாஜ்' என்பது பரந்த பொருளைக் கொண்டிருப்பதுடன் ஒரு சமயக்கட்டளையுமாகும். இதனால் இதனை இபாதத் எனக் கொள்கிறோம்.

முற்றிலும் வேறுபட்ட அல்லது பகுதியளவில் வேறுபட்ட சில சமயங்களில் முற்றிலும் ஒன்றிய அல்லது பகுதியளவில் ஒன்றிய இயல்புகளைக் கொண்ட ஒரு ஆணும் பெண்ணும் திருமண பந்தத்தின் மூலம் இணைந்து வாழ தலைப்படுகின்றனர்.

இதன்போது ஒவ்வாமைகள் தோன்றுவதன் காரணமாக அத்திருமண வாழ்க்கையை நீடித்துச்செல்ல முடியாத நிலைமை தோன்ற முடியும். இதற்கான இஸ்லாத்தின் தீர்வே ' விவாக விடுதலையாகும்'. பொதுவாக தலாக் என்ற பதத்தின் மூலம் இது அறியப்படுகின்றது. இதனை நெறிப்படுத்த இறை வழிகாட்டல்கள் அல்-குர்ஆன்இ ஸுன்னா மூலமாக முன்வைக்கப்பட்டுள்ளன.


இறைவன் ஆகுமாக்கியவற்றில் அவனுக்கு மிக வெறுப்பானது தலாக் ஆகும். இதன் மூலம் குறித்த அச்செயற்பாட்டின் பெறுமானத்தை உணர முடிகின்றது. அத்துடன் விவாக விடுதலை தொடர்பில் பல்வேறு வழிகாட்டுதல்களை இஸ்லாம் விபரித்திருப்பதைக் காணலாம். இவ்வகை விவாக விடுதலைக்கு முன்னரான சமரச முயற்சியினை அல்-குர்ஆன் விபரிக்க தவறவும் இல்லை.

ஸுரா அந்நிஸா வசனம் 35 விவாக விடுதலை வழங்க வேண்டிய சந்தர்ப்பத்தினை தெளிவுறுத்துவதாக அமைகின்றது மேலும் ஸுரா அல்-பகறா வசனம் 224 பிரிவினையின் போது நாகரிகமாக நடந்து கொள்வது தொடர்பாக குறிப்பிடுவதுடன் இது தொடர்பில் விபரிக்கும் ஒரு அத்தியாயத்தினை அல்குர்ஆனில் காணலாம்.

விவாக விடுதலை வகைப்பாடு பல்வேறுபட்டது. அவற்றில் பிரதான 3 வகைகளுண்டு.

1. தலாக் - ஆண்களால் மேற்கொள்ளப்படுவது
2. பஸஹ் - திருமண ஒப்பந்தம் வறிதாகும் படியான செயற்பாகள் கண்டறியப்படுவதுடன் மூலம் முறிவுற வருவது.
3. குல்உ – பெண்களால் மேற்கொள்ளப்படுவது

இவற்றில் தலாக் என்பது பின்வருமாரு வகைப்படுத்தப்படும்.




ஆய்வுப்பிரதேசத்தினைப் பொறுத்தவரை தற்காலிக கல்விச்சிந்தனை, பாரம்பரியத்தின் மாற்றத்தின் செல்வாக்குகளின் விளைவினால் விவாக விடுதலை தொடர்பிலான கருத்தியல் செல்வாக்கு முற்போக்காக கையாளப்படும் நிலையை அவதானிக்கலாம்.

ஆய்வுப்பிரதேச காழி நீதிமன்ற தரவுகளின் (இஸ்மாயில், 2014) பிரகாரம் பல்வேறு பிரதான காரணிகளின் மற்றும் முக்கியத்துவமற்ற சில சிக்கல்களின் விளைவில் விவாக விடுதலை இடம்பெறுவது கோடிட்டு காட்டப்படுகின்றது. இதற்கென பல்வேறு காரணிகள் அடையாளப்படுத்தப்பட்டிருப்பினும் பல்வேறு வகையான தெளிவின்மை காரணமாக இஸ்லாம் அனுமதிக்காத இவ்விடயம் முன்னேற்றகரமாக வளர்ச்சி அடைந்து செல்வதையே தரவுகள் காண்பிக்கின்றன. திருமணம் விவாகரத்து தொடர்பான ஆய்வுகளை சம்மாந்துறை பிரதேசத்தை மையமாகக் கொண்டு இடம்பெற்ற போதிலும் அவை சிதறுண்ட வகையிலேயே இடம்பெற்றிருப்பதனை காணலாம். ஆய்வுப் பிரதேசத்தின் காழி நீதிமன்றத்தின் தகவல்களையும்இ கள அவதானம் ஒழுங்கு படுத்தப்பட்ட தனிநபர் மற்றும் குழுக்கலந்துரையாடல் மூலம் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் காரணங்கள்இ விளைவுகள் கண்டறியப்பட்டு இஸ்லாமிய வழிமுறைகளை உட்புகுத்துவதற்கும் சிக்கல்களை இழிவாக்குவதற்கும் என ஆலோசணைகளை பரிந்துரைக்கும் பின்னணியில் இவ்வாய்வு அமைகின்றது.

## ஆய்வின் நோக்கம்

1. சம்மாந்துறை காழி நீதிமன்றில் இடம் பெறும் விவாக விடுதலைக்கான காரணங்களை அடையாளப் படுத்தி தாக்கங்களை மதிப்பிடல்.

2. ஆய்வுப்பிரதேசத்தில் இடம்பெறும் விவாகவிடுதலையைத் தொடர்ந்தான சிக்கல்களை அல்லது தாக்கங்களை குறைப்பதற்கனா இஸ்லாத்தின் வழிகாட்டல்களின் செல்வாக்கினை மதிப்பிடல்.

## ஆய்வு முறையியலும் தரவு சேகரிப்பும்

கலப்பு முறையை (Mixed Method) பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் இவ்வாய்வை சம்மாந்துறை காதி நீதி வலயத்தில் கடந்த 3 வருட கால எல்லையினுள் இடம்பெற்ற விவாக விலக்கு ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றன. 2015, 2016, 2017ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற

விவாகவிலக்கு முறையே தலாக், பஸஹ் ஆகியவை கவனத்திற்கொள்ளப்பட்டதுடன், 06 பேருடனான நேர்காணல், நேரடி அவதானம், குழுக்கலந்துரையாடல், துறைசார் நிபுணத்துவம் வாய்ந்தவர்களுடனான கலந்துரையாடல் ஆகிய தரவு சேகரிப்பு உத்திகளைப் பயன்படுத்தி பெறப்பட்ட தகவல் பொருத்தமான மென் பொருட்களின் துணையுடன் கணனிப் பகுப்பாய்விற்குட்படுத்தப்பட்டு வரைபுகள் அட்டவணைகள் மூலம் தகவல் முன்வைக்கப்பட்டுள்ளன.

| ஆண்டு | இடம் பெற்ற விவாகரத்துக்களின் வகை | | இடம் பெற்ற திருமணங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| | தலாக் | பஸ்கு | |
| 2015 | 40 | 56 | 553 |
| 2016 | 48 | 45 | 552 |
| 2017 | 41 | 34 | 578 |

**பெறுபேறுகளும் கலந்துரையாடலும்**

தலாக் பஸஹ் அபிப்பிராயங்களும் வேறுபாடுகளும் இஸ்லாம் வழங்கிய உரிமைகளுள் விவாக விடுதலைக்கான உரிமையும் பிரதானமானதாகும். இவ்வுரிமை மூலமாக ஆண், பெண் இருபாலாரதும் பொருளாதார சமூக அந்தஸ்து பாதுகாக்கப்படுகின்றது.

குடும்பப்பிரச்சினைகளின் போது வாழ்வைத் தொலைத்தல் என்ற அம்சத்தினை இல்லாதொழித்து சுமூகமான முறையில் புதிய ஆரம்பத்திற்கு வழி வகுப்பதே விவாக விடுதலை அனுமதிக்கான காரணமாகும். இதனையே அல்-குர்ஆன் பின்வருமாறு பிரஸ்தாபிக்கின்றது.

(மீளக் கூடிய) தலாக் கூறித் தவணை - இத்தத் - முடிவதற்குள் முறைப்படி அவர்களை (உங்களுடன்) நிறுத்திக் கொள்ளுங்கள், அல்லது (இத்தாவின்) தவணை முடிந்ததும் முறைப்படி அவர்களை விடுவித்து விடுங்கள், ஆனால் அவர்களை உங்களுடன் வைத்துக் கொண்டு அவர்களைத் துன்புறுத்தாதீர்கள், அவர்களிடம் வரம்பு மீறி நடவாதீர்கள், இவ்வாறு ஒருவர் நடந்து கொள்வாரானால் அவர் தமக்குத் தாமே தீங்கிழைத்துக் கொள்கிறார், எனவே அல்லாஹ்வின் வசனங்களைக் கேலிக்கூத்தாக ஆக்கிவிடாதீர்கள், அவன் உங்களுக்கு அளித்த அருள் கொடைகளையும் உங்கள் மீது இறக்கிய வேதத்தையும் ஞானத்தையும் சிந்தித்துப் பாருங்கள். இவற்றைக் கொண்டு அவன் உங்களுக்கு நற்போதனை செய்கின்றான், அல்லாஹ்வை அஞ்சுங்கள், நிச்சயமாக அல்லாஹ் யாவற்றையும் நன்கறிபவனாக இருக்கின்றான் என்பதை அறிந்து கொள்ளுங்கள். (ஸுறா அல்-பகறாஇ வசனம்: 231)

இன்னும் பெண்களை நீங்கள் தலாக் செய்து அவர்களும் தங்களுடைய இத்தா தவணையைப் பூர்த்தி செய்து விட்டால் அவர்கள் தாங்கள் விரும்பி ஏற்கும் கணவர்களை முறைப்படித் திருமணம் செய்து கொள்வதைத் தடுக்காதீர்கள், உங்களில் யார் அல்லாஹ்வின் மீதும் இறுதி நாள் மீதும் நம்பிக்கை கொண்டுள்ளார்களோ அவர்களுக்கு இதைக் கொண்டு உபதேசிக்கப்படுகிறது, இ(தன்படி நடப்ப)து உங்களுக்கு நற்பண்பும் தூய்மையும் ஆகும், (இதன் நலன்களை) அல்லாஹ் அறிவான், நீங்கள் அறியமாட்டீர்கள். (ஸுறா அல்-பகறாஇ வசனம்: 232)

(தலாக் சொல்லப்பட்ட மனைவியர் தம்) குழந்தைகளுக்குப் பூர்த்தியாகப் பாலூட்ட வேண்டுமென்று (தந்தை) விரும்பினால் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு நிரப்பமான இரண்டு ஆண்டுகள் பாலூட்டுதல் வேண்டும், பாலூட்டும் தாய்மார்களுக்கு (ஷரீஅத்தின்) முறைப்படி உணவும் உடையும் கொடுத்து வருவது குழந்தையுடைய தகப்பன் மீது கடமையாகும், எந்த ஓர் ஆத்மாவும் அதன் சக்திக்கு மேல் (எதுவும் செய்ய) நிர்ப்பந்திக்கப்

படமாட்டாது, தாயை அவளுடைய குழந்தையின் காரணமாகவோ (அல்லது) தந்தையை அவன்குழந்தையின் காரணமாகவோ துன்புறுத்தப் படமாட்டாது, (குழந்தையின் தந்தை இறந்து விட்டால்) அதைப் பரிபாலிப்பது வாரிசுகள் கடமையாகும், இன்னும் (தாய் தந்தையர்) இருவரும் பரஸ்பரம் இணங்கி ஆலோசித்துப் பாலூட்டலை நிறுத்த விரும்பினால் அதில் உங்களுக்கு ஒரு குற்றமுமில்லை, ஆனால் (அக்குழந்தையின் தாய்க்கு உங்களிடமிருந்து) சேர வேண்டியதை முறைப்படி செலுத்திவிட வேண்டும், அல்லாஹ்வுக்கு அஞ்சி நடந்து கொள்ளுங்கள் - நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்வதைப் பார்ப்பவனாக இருக்கிறான் என்பதை அறிந்து கொள்ளுங்கள். (ஸூறா அல்-பகறாஇ வசனம்: 233)

மேலும் அல்லாஹ்இ தலாக் சொல்லி மனைவியடன் பிரிந்த பிறகும் கூட அவளுக்குரிய முக்கியத்துவம் பற்றி கூறுகையில்இ

நீங்கள் ஒரு மனைவி(யை விலக்கி விட்டு அவளு)க்கு பதிலாக மற்றொரு மனைவியை (மணந்து கொள்ள) நாடினால் முந்தைய மனைவிக்கு ஒரு பொருட்குவியலையே கொடுத்திருந்த போதிலும் அதிலிருந்து எதையும் (திரும்ப) எடுத்துக் கொள்ளாதீர்கள் - அபாண்டமாகவும் பகிரங்கமாகப் பாவகரமாகவும் அதனை நீங்கள் (திரும்பி) எடுக்கிறீர்களா? (ஸூறா அந்நிஸாஇ வசனம்: 20)

தலாக் என்பது ஒரு ஆணால் பெண்ணை விவாகப் பந்தத்திலிருந்து தனது பொறுப்பு பராமரிப்பில் இருந்து விடுவிப்பதைக் குறிக்க பயன்படும். இதன்போது தலாக் ஹஸன்இ அஹ்ஸன் ஆகிய இரு நடைமுறைகள் வழக்கில் காணப்படுகின்றன. அவற்றில் அஹ்ஸன் முறையிலான தலாக் முறைமையே பாவனையில் உள்ளதை அவதானிக்கலாம்.

அடுத்து ஒரு பெண் தனது கணவனை விவாகப் பந்தத்தில் இருந்து விடுவிப்பதனை 'குல்உ' என்ற அறபுப்பதம் அடையாளப்படுத்துகின்றது. ஆன போதிலும் இந்நடைமுறை 'பஸ்கு' என்ற பதத்தினாலேயே அடையாளப்படுத்துகின்றது. சட்ட வழக்கிலும் இப்பதமே பிரயோகத்தில் உள்ளது அவதானிக்கத்தக்கது. கருத்தியல் உடன்பாட்டின் விளைவினால் அது இன்று வரை பயன்பாட்டில் உள்ளதெனலாம்.

**சம்மாந்துறை காழி நீதிமன்ற நடைமுறைகள்**

பொதுவாக இலங்கைக் காதி நீதிமன்ற நடைமுறைகளை எடுத்துக் கொண்டால் 1951ம் ஆண்டின் சட்டத்தின் பிரிவு 27 தலாக் அறிவிப்பில் பின்வரும் நடைமுறைகள் பேணப்பட வேண்டும். மனைவியை தலாக் கூற விரும்பும் ஒரு கணவன் முதலில் அம்மனைவி வாழும் பிரதேசத்து காதி நீதிமன்றத்திற்கு தனது எண்ணத்தை வெளிப்படுத்தி அறிவித்தல் கொடுக்க வேண்டும். உறவினர்இ அப்பிரதேசத்தில் உள்ள பெரியோர் செல்வாக்கு பெற்றவர்களின் உதவியுடன் அவர்களை ஒன்று சேர்க்க முயற்சிக்க வேண்டும். இவ்வறிவித்தல் கொடுத்து 30 நாட்களுக்கள் திறத்தவர்களிடையே சமரசம் ஏற்படுத்த காதி நீதவானினால் முடியாது எனும் பட்சத்தில்இ காதி நீதவான் மற்றும் 2 சாட்சிகளின் முன்னிலையில்இ கணவன் தலாக் அறிவிப்பு செய்ய வேண்டும்.

அச்சந்தர்ப்பத்தில் மனைவி அங்கு பிரசன்னமாகியிருக்காவிட்டால் தலாக் அறிவிப்ப செய்யப்பட்டதை அம்மனைவிக்கு காதி நீதவான் அறிவிக்க வேண்டும். தலாக் கூறி 30 நாட்களுக்குள் திறத்தவர்களிடையே சமரசத்ததை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும் முடியவில்லையாயின் திறத்தவர் அவரின் முன்னால் பிலசன்னமாதற்கு ஒரு திகதியை தீர்மானிக்க வேண்டும். மீண்டும் சமரசம் செய்வதற்குரிய முயற்சிகளை செய்ய வேண்டும். காதி நீதவானினால் திறத்தவர்கள் நீதிமன்றத்தில் தோற்றவதற்காக நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் சமரசம் ஏற்படவில்லையாயின் விவாகரத்துப் பதிவு செய்யப்படலாம். (சூளனி கொடிக்கார 2010இ முஸ்லிம் குடும்ப சட்டம்இ பக்: 79:80)

சம்மாந்துறையின் காழி நீதிமன்ற நடைமுறையானதுஇ இச்சட்டப் பிரிவை அடியொட்டி கொண்டு செல்ல எத்தனித்த போதிலும் காதி நீதவானினால் உறவினர்கள் அப்பிரதேசத்தில்

உள்ள பெரியோர்கள் செல்வாக்கு பெற்றவர்களின் உதவியுடன் ஒன்று சேர்க்க முடியாமல் உள்ளதுஇ இதற்கான காரணமாகஇ காழி நீதிமன்றத்தை நோக்கி படியேற வேண்டும் என்ற வரட்டு கௌரவம்இ காழி நீதிமன்றத்தை நோக்கி செல்வதை தடுக்கப்பட்ட இடமாக கருதுதல்இ இன்னும் பெற்றோர்களே தன் பிள்ளைகளின் எதிர்காலத்தை கருத்திற்கொள்ளாது காதி நீதவானிற்கான போதிய ஒத்துழைப்பை வழங்காமை.

அடுத்து இன்னுமொரு விடயத்தை நோக்கினால்இ காதி நீதிபதி 30 நாட்களுக்குள் சமரசத்தை ஏற்படுத்த வேண்டும் இல்லையெனில் 2 சாட்சியங்களின் முன்னிலையில் தலாக் அறிவிப்பு செய்யமுடியும். சம்மாந்துறை காதி நீதிமன்றத்தில் இவ்வாறான விடயத்திற்கு சாட்சிகளினைக் கொண்டு வருவதில் பல இடரகள் காரணமாக உள்ளது. ''பெண் பாவம் பொல்லாதது'' என நினைத்து பலர் அங்கு ஒதுங்கி விடுவதால் பணம் கொடுத்து சாட்சியங்களை அழைத்து வந்து தலாக் அறிவிப்பு நடைபெறுகிறது.

சம்மாந்துறை காதி நீதிமன்றத்தை பொறுத்த வரை தலாக், பஸ்ஹு இரண்டுமே நடைபெறுகின்றது. அதிலும் பஸ்ஹு முறையே அதிகம் இடம்பெறுகின்றது. இச்சந்தர்ப்பத்தில் காதி நீதவான் சமரசப்படுத்தவே அதிகம் எத்தனித்து முயற்சிக்கின்றார். இருந்தும் அங்கு வாதியாக தோன்றும் அப்பெண்ணுடைய பெற்றோரின் தலையீடு அதிகமாக காணப்படுவதால் காதி நீதவான் அவ்விடயத்தில் உணர்ச்சி வசப்படுவதையும் காண முடிந்தது. இதனால் சமரசத்தை விட அவ்வழக்கை முடிவுக்கு கொண்டு வரவே எத்தணிப்பதையும் அவதானிக்க முடிகின்றது.

''இன்னும் கணவன் மனைவிக்கு இருவருக்குமிடையே பிளவு ஏற்பட்டு விடுமோ என நீங்கள் அஞ்சினால் அவரின் உறவில் இருந்து ஒரு நடுவரையும் அவளின் உறவில் இருந்து ஒருவரையும் நீங்கள் அவ்விருவரிடமும் அனுப்புங்கள்இ நடுவர்களாகியவர்கள் கணவன் மனைவிக்கிடையே இணக்கத்தை உண்டாக்க நாடினால் இருவருடைய இணக்கத்திற்கு அல்லாஹ் உதவி செய்வான் (ஸூறா அந்நிஸாஇ வசனம்: 35)

அந்த வகையில் காதி நீதவானினால் முடியாது போகும் சந்தர்ப்பத்தில் விவாக விடுதலை செய்யப்படுகின்றது. இச்சந்தர்ப்பத்தில்இ வெளிநாட்டு அறிவித்தல்கள் சட்டத்தில் குறிப்பிட்டபடி சேர்க்கப்படுகின்றது. விவாகரத்தானது தமிழ் அல்லது ஆங்கிலத்தில் பதிவு செய்யப்பட்டு 3 பிரதிகள் பேணப்படுகின்றது.

இவ்வாறு விவாகரத்து இடம்பெறுவதற்கான பொதுவான காரணங்கள்

- மூன்றாம் நபர் தலையீடு
- சீதனம்
- இளவயது திருமணம்
- அந்தஸ்து வேறுபாடு
- வாழத்தெரியாமை
- கல்வித்தகுதி வேறுபாடு
- சொத்துப் பிரச்சினை
- வெளிநாட்டு வேலைவாய்ப்பு
- கள்ளத்தொடர்பு
- வசதியின்மை
- ஏற்றத்தாழ்வு
- சந்தேகம்
- உழைப்பின்மை
- கணவனின் தொல்லை
- கடன் சுமை
- கணவனின் பொறுப்பற்ற தன்மை
- ஏமாற்றுத் திருமணம்

- தாம்பத்திய உறவில் குறை
- விட்டுக்கொடுக்காமை
- பாலியல் குறைபாடு
- குழந்தைப் பேறின்மை
- மார்க்க விளக்கமின்மை
- ஆடம்பர மோகம்
- சுத்தமின்மை
- மாறி வரும் வாழ்க்கைச் சூழல்

**சம்மாந்துறை காழி நீதிவலயத்தில் இடம்பெறும் விவாக விடுதலைக்கான காரணிகள்**

- பொருளாதார பிரச்சினை
- செல்போன் பாவனை
- வயது பொருத்தப்பாடு இன்மை (அதாவது பெண்ணின் வயது 20 ஆகவும் ஆணின் வயது 45 ஆகவும் இருத்தல்)
- வெளிநாட்டுக்குச் செல்லல்
- இணக்கப்பாடு இன்மை
- பெற்றோர்களின் தலையீடு
- நோயாளிளாக இருப்பது திருமணத்தின் பின் அறியவருவது
- கணவனுக்கு செய்யும் நம்பிக்கைத் துரோகம்
- சந்தேகம்
- போதிய மார்க்க அறிவின்மை
- அவசர முடிவுகள் (சண்டையின் பின் நிதானம் தவறிய முடிவுகள்)
- கணவனை அலட்சியம் செய்தல்
- மாமியாருக்கும் மருமகளுக்குமிடையே அடிக்கடி ஏற்படும் புரிந்துணர்வற்ற சண்டைகள்
- பொய் பேசுவது மேலும் உண்மையை மறைப்பது
- எதிர்பார்ப்பு களைவது
- உடலுறவில் விருப்பமில்லாதிருத்தல்
- குடும்ப கௌரவம் இழக்கும்படி கேவலமாக நடப்பது
- வாழ்க்கையில் வெறுப்பு
- குழந்தை உருவாவதை கணவன் விரும்பாமையால் கருக்கலைப்பு செய்ய எத்தணித்தல்
- குழந்தை பிறந்த பின் மனைவி மீதான அன்பு படிப்படியாக குறைதல்

**உலகு மக்களிடையே விவாகரத்து**

உலக மக்களிடையே ஏற்படும் விவாகரத்து பரம்பல்கள்

| நாடுகள் | சதவீதம் |
|---|---|
| பிரான்ஸ் | 31% |
| கிரீஸ் | 22% |
| அயர்லாந்து | 21% |
| ஜேர்மனி | 20% |
| லுக்ஸ்மன்பேக் | 20% |

| | |
|---|---|
| ஸ்பைன் | 18% |
| இத்தாலி | 18% |
| இங்கிலாந்து | 18% |
| போர்த்துக்கல் | 17% |
| டென்மார்க் | 17% |
| பெல்ஜியம் | 16% |
| நெதர்லாந்து | 13% |

**பஸ்கு இடம்பெற்ற பின் பெண்ணின் நிலைமை**

- தனிமை உணர்வு
- குற்ற உணர்வு
- பதற்றமான நிலை
- மகிழ்ச்சியற்ற தன்மை
- மன உழைச்சல்
- சமூகத்தின் பழிச்சொல்லுக்கு ஆளாகல்
- பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்படல்
- வருமானமற்ற தன்மை
- குழந்தைகளின் எதிர்காலம் பற்றிய கேள்விக்குறி

**தலாக் இடம்பெற்ற பின் பெண்ணின் நிலைமை**

- கலாச்சார சீர்கேடு
- சமூகத்தை விட்டு ஒதுக்கப்படல்
- குழந்தைகளை தான்தோன்றித்தனமாக நடத்தல்
- போதை வஸ்த்துக்களின் அதிகரிப்பு
- தந்தை பெயர் தெரியாத பிள்ளைகள் உருவாதல்
- உறவுகள் துண்டிக்கப்படல்
- சமூக கௌரவம் அந்தஸ்து பாதிக்கப்படல்
- பாலியல் துஸ்பிரயோகம் அதிகரித்தல்
- நோய்களின் அதிகரிப்பு (எயிட்ஸ்)

**விவாக விடுதலை விடயங்களை கையாள்வது தொடர்பான இஸ்லாமிய வழிகாட்டல்**

கலந்துரையாடப்பட்ட இஸ்லாமிய வழிகாட்டலின் செல்வாக்கினை நோக்கையில்இ விவாக விடுதலைக்கு முன்னரான சமரச நடவடிக்கைகககளுக்கான வழிகாட்டல் பெருமளவில் புறக்கணிக்கப்படுவதை அவதானிக்கலாம். இதற்கு காரணங்களாக பல்வேறு விடயங்களை முன்வைக்க முடியும்இ சில குறிப்பிட்ட விடயங்களை இங்கு குறிப்பிட முடியும். குடும்பங்களின் பந்தப்பிணைப்பு இறுக்கமாக அமையாமையும்இ இருதரப்பினரும் மானசீக ரீதியான சிக்கல்களை மையமாகக் கொண்டு கலந்தாலோசிக்க விரும்பாமைஇ போலி குடும்ப கொரவம்இ நிதானமின்றி முடிவுக்கு வரல் போன்றன தடைகளாக அமைவதனை அவதானிக்கலாம்.

| ஆண்டுகள் | மொத்த விவாகரத்துக்கள் | 1970ல் திருமணத்துக்கு: விவாகரத்து | 100 திருமணத்துக்கு: விவகாரத்து | 1970ல் 100 எனில் சதவீத வளர்ச்சி |
|---|---|---|---|---|
| 1970 | 37,447 | 100 | 11.3 | 100 |
| 1975 | 54,306 | 145 | 16.0 | 141 |
| 1980 | 79,962 | 213 | 22.5 | 199 |
| 1985 | 105,962 | 283 | 30.0 | 265 |
| 1986 | 106,709 | 285 | 30.6 | 271 |
| 1987 | 104,497 | 280 | 30.5 | 270 |
| 1988 | 104,234 | 278 | 30.8 | 273 |

| ஆண்டு | 1989 | 1993 |
|---|---|---|
| மொத்த விவாகரத்துக்கள் | 103,600 | 109,200 |

பிரான்ஸில் சட்ட அமைப்பை நாடுவது என்ற ஆய்வில்:

| சதவீதம் | எதற்காக |
|---|---|
| 28% | விவாகரத்து |
| - | களவு |
| 11% | ஏமாற்றம் |
| 11% | சொத்துரிமை |
| 10% | வாங்குவது-விற்பது |
| 9% | பத்திரிகைக்கெதிராக |
| 8% | வேலைப்பிரச்சினை |
| 23% | மற்றவை |

உலக விவாகரத்து வீதம்

| வகை.:. நாடு | 1970-1974 | 1995 |
|---|---|---|
| பெல்ஜியம் | 0.8% | 3.5% |
| ஜேர்மனி | 1.5% | 2.1% |
| பிரான்ஸ் | 0.9% | 2.0% |
| கிரீஸ் | 0.4% | 1.0% |
| இத்தாலி | 0.4% | 0.5% |
| போர்த்துக்கல் | 0.1% | 1.2% |
| இங்கிலாந்து | 1.6% | 2.9% |

10:1000க்கான விவாகரத்து குறிப்பிடுகையில்:

| நாடுகள் | எண்ணிக்கை |
|---|---|
| ஸ்பைன் | 8 |
| ஜேர்மனி | 18 |
| பிரான்ஸ் | 20 |
| ஆஸ்திரியா | 21 |

| | |
|---|---|
| பெல்ஜியம் | 21 |
| பின்லாந்து | 24 |
| டென்மார்க் | 24 |
| சுவீடன் | 25 |
| இங்கிலாந்து | 30 |

பிரான்ஸில் நடக்கும் விவாகரத்துக்கள்

| பதில் | சதவீதம் |
|---|---|
| பேசி சமரசம் | 53% |
| விதியை நொந்து பிரச்சினையை மறப்பது | 20% |
| ஆலோசனை | 11% |
| விவாகரத்து | 8% |
| பிரிவு | 8% |

இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் இவ்விருவருக்கும் இடையில் இஸ்லாமிய வழிகாட்டுதல்களின் தேவை முன்னிற்கின்றது. அந்த வகையில் இவ்விருவருக்கும் திருமண பந்தத்தின் முக்கியத்துவத்தினை எடுத்துக்கூறல் திருமணம் என்பது ஒரு ஒப்பந்தம் என்ற போதிலும் கூட இதனை சரியான முறையில் எடுத்தியம்பி நடக்கும் போது அல்லாஹ்வினுடைய அருள் கிட்டும் என்பதனையும் சமூக அந்தஸ்து சரியான முறையில் எடுத்தியம்பி நடக்கும்போது அல்லாஹ்வினுடைய அருள் கிட்டும் என்பதனையும் சமூக அந்தஸ்து சரியான முறையில் நிலைபெறும். பிள்ளைகளின் எதிர்காலம் சிறக்கும். இதனூடாக நிலை பேறுடைய சந்ததிகள் உருவாகும் என இருவருக்கும் மத்தியில் விளங்க வைத்தல். ஏனெனில் அதிகமான தலாக்குகளும் பஸ்குகளும் வருவதற்கான அடிப்படைக் காரணம் திருமண ஒப்பந்தத்தின் போதிய அறிவின்மையே காரணம் திருமண ஒப்பந்தத்தின் போதிய அறிவின்மையே காரணம். அதன் அடிப்படையில் இஸ்லாத்தில் திருமணத்திற்கான வழிகாட்டல்கள் மிகவும் தெளிவான முறையில் குர்ஆன் ஸுன்னாவில் கூறப்பட்டுள்ளது. இது பற்றிய பூரண அருளைப் புகட்டினாலே இவர்களுடைய குடும்ப வாழ்வு சிறக்க வழி என்பதில் எந்தவித மாற்றுக் கருத்தும் இல்லை.

## முடிவுகளும் விதந்துரைப்புக்களும்

இந்த நாட்டில் இஸ்லாமிய ஷரீஆ சட்டம் பேண முஸ்லிம் தனியார் சட்டம் என்ற ஒன்றின் மூலம் சட்ட வாய்ப்பை அரசாங்கம் ஏற்படுத்தி இருப்பது ஒரு வரப்பிரசாதமாகும். இலங்கை முஸ்லிம் தனியார் சட்டத்தில் விவாகரத்து குறித்த விதிகளை பற்றிய முறையான தெளிவின்மை காரணமாக மக்கள் எடுத்த எடுப்பிலேயே காழி நீதிமன்றங்களில் மனுத் தாக்கல் செய்கின்றனர். இதன் பின்னர் இவ்விருவருடைய நிலையை எடுத்து நோக்கினால் அதிகம் பாதிக்கப்படுவது பெண்களும் பிள்ளைகளுமே. இதன் பின்னர் ஒவ்வொரு குடும்பமும் எதிர் நோக்குகின்ற சவால்கள் இதனால் அக்குடும்பத்திற்கு ஏற்படுகின்ற இழுக்குஇ பிள்ளையை வளர்த்து எடுப்பதில் உள்ள திண்டாட்டம்இ அக்குழந்தை சரியான முறையில் பிள்ளைத் தாபரிப்புப் பணத்தை செலுத்தாமல் இழுத்தடிக்கும் கணவன்மார் இதனால் ஒவ்வொரு நாளும் கடனிலே கழியும் நாட்கள்இ அது மட்டுமல்லாமல் பெண்ணுக்கு

பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு இன்றி இழுக்குச் சொல்லுக்கு முகம் கொடுக்கும் நிலை. பொதுவாக சம்மாந்துறையை பொறுத்த வரையில் ஆண்களை விட பெண்களின் தொகை அதிகம் இதனால் ஆண்கள் விவாகரத்தை விரைவாக வழங்கி வருகின்றனர். அதில் தவணை வழங்குவதை கூட தவிர்க்க எத்தனிக்கின்றனர். இத்தகைய விவாகரத்துக்கள் முஸ்லிம் சமூகத்தில் அதிகம் இடம்பெறுகின்றமை கவலைக்குரியதாகும்.. விவாகரத்து செய்து கொண்டோரின் குடும்பத்திலும் சமூகத்திலும் இப்பிரச்சினை பல தாக்கங்களை ஏற்படுத்தி உள்ளதாகவும் நேர்காணல் மற்றும் கள அவதானம் மூலம் அறியப்பட்ட தகவல் ஆகும். எனவே இவ்வாறு மூலம் கண்டறியப்பட்ட விதந்துரைப்புக்கள் கண்டறியப்பட்டு பாதிப்புக்கள் குறைக்கப்பட வேண்டும். பின்வரும் விதந்துரைப்பு இப் பிரதேச முஸ்லிம்கள் மத்தியில் குறைப்பதற்கும் ஏனைய இடங்களில் வாழும் முஸ்லிம்களுக்கும் இது விழிப்புணர்வை ஏற்படுத்தும்.

இவ்வாய்வின் முடிவுகளும் விதந்துரைப்புகளும்

1. திருமணம் எனும் 'ஒப்பந்தம்' பற்றிய போதிய அறிவினை திருமணத்திற்கு முன்னர் இரு தரப்பினருக்கும் வழங்கல்
2. இப்பிரதேசத்தை பொறுத்த வரை சீதனம் எனும் சீரற்ற வரைமுறையை இல்லாமல் செய்வதற்கு இளைஞர்கள் மத்தியில் இஸ்லாமிய வழிகாட்டல்களை இள வயதிலிருந்தே வழங்கி வருதல்
3. இதன்படி விவாகரத்துக்குப் பின்னர் சமூகத்தில் சந்திக்க வேண்டிய சவால்களை இருவருக்கும் எடுத்துக் கூறல்
4. திருமணம் பற்றி குர்ஆன் ஸுன்னாவில் கூறப்பட்டுள்ள விடயங்களை தெளிவான முறையில் சமூகத்தின் மத்தியில் எடுத்துக் கூறல்
5. பிள்ளைகளுடைய எதிர்காலம் பெற்றோர்களுடைய வழிகாட்டலில் இருந்து உள்ளது எனவே ஒவ்வோரு பெற்றோரும் உறவினுடைய உண்மைத் தன்மையை பிள்ளைகளுக்கு மத்தியில் எடுத்துக் கூறல்.
6. பொதுவாக A/L, O/L எழுதிய மாணவர்களுக்கு Free Marriage Course என்ற வழிகாட்டல்களை வழங்கல்.
7. பள்ளிவாசல்களில் அடிக்கடி அதுபற்றிய மார்க்கப் போதனைகளை வழங்கல்.
8. இன்று பெண்கள் கல்விக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தினை போன்று கணவன்மார்களுக்கும் கண்ணியத்தினை வழங்கல். இதன் மூலம் இருவருக்கும் இடையில் சிறந்த புரிதலை ஏற்படுத்த முடியும்.

முடிவாக நோக்குகையில் சம்மாந்துறை முஸ்லிம் மக்களிடையே விவாகரத்தானது பல காரணிகளை மையப்படுத்தி இடம்பெறுவதையும் அதில் குடும்பம் மூன்றாம் தரப்பினர் மது பாவனை மற்றும் தொலைத்தொடர்பு சாதனங்கள் செல்வாக்குச் செலுத்தி இருப்பதையும் இதற்கு அடிப்படைக் காரணமாக அமைவது மார்க்க அறிவு பற்றிய தெளிவிண்மையும் அந்நிய கலாச்சார ஊடுருவலுமே உந்துகோலாக அமைந்துள்ளது. இதன் இறுதிப் பெறுபாறாக விவாகரத்தில் முடிவதிலையே இவ்வாய்வின் முடிவு வெளிப்படுத்துகின்றது இனி வரும் காலங்களில் இதனுடைய செல்வாக்கு ஊடுருவும் சாத்தியப்பாடு அதிகம் காணப்படுவதனால்

அதனை கருத்திற் கொண்டு இத்தகைய விவாகரத்து முயற்சிகளைத் தடுப்பதற்கான விதந்துரைகள் முன்மொழியப்பட்டுள்ளன.

**உசாத்துணைகள்**


நூல்கள்

1. ஹஸனா சே.இ. (2015). இஸ்லாமிய நோக்கில் பால்நிலை சமத்துவம் சம நீதி முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டம் இஸ்லாமிய சட்டமும் கொழும்பு. இலங்கை அபிவிருத்திக்கான ஊடகவியலாளர் மன்றம்.

2. ஆண்டறிக்கை "2015 2016 2017" பிரதேச செயலகம்.

3. கொடிகார சூலனி.மு (1999). இலங்கையில் முஸ்லிம் குடும்பச் சட்டம் கொள்கை நடைமுறை மற்றும் பெண்கள் தொடர்பான அக்கரைக்குரிய விடயங்கள் கிருலப்பனை: முஸ்லிம் ஆராய்ச்சி செயல் முன்னணி.

4. Safana gulf begun (.2015) is equal justice possible a review of Sri Lanka Muslim marriage & divorced act & Islamic women association for research & empowerment association for research & empowerment.

5. Saleem marsoof 2001 the quazi court system in Sri Lanka & it's impacts on Muslims woman. Kirulapana Muslim women research & action forum

6. The memories of judge. CG. Wearmantry,2014

7. அமீன்இ ஏ.ஜ் (2011). காசி நீதிமன்ற நடைமுறைகளும் செயற்பாடுகளும் கொழும்பு. அல் அமீன் சட்டமைய வெளியீடு.

8. பைசூல் சக்கரையா (2014). உரிமைகளையும் வெளிகளையும் கூறும் வன்னிய கொழும்பு முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி.

9. மன்சூர், எம்.ஏ.எம் (2017) முஸ்லிம் தனியார் சட்டம் சில அவதாதனங்கள் பதிப்பகம்.

இணையத்தளங்கள்

1. முஸ்லிம் தனியார் சட்டம், Muslim personal law. Retrieved (2019.07.03)

2. இலங்கையில் தினமும் 300 பேர் விவாகரத்து. (23.08.2019)
3. இலங்கை விவாகரத்துச் சட்டம்இ திருமண தீர்வுகள்
4. பவாஸ் ரௌஸ்தீன்இ ஆ(2017) முஸ்லிம் மத்தியில் அதகரித்து வரும் விவாகரத்து காரணங்கள் விளைவுகள் பற்றிய ஓர் எடுத்துரைப்பு

நேர்காணல்கள்

1. ஆதம்பாவா முஹம்மது.ஆ 2019.05.23 போடியார் வீதி சம்மாந்துறை.
2. பாறூக் பரீனா. (2019.05.23). 81 கிராமம் சம்மாந்துறை.ள
3. லெப்பை றபீக் (2019.06.18) செந்நெல் கிராமம் 01 சம்மாந்துறை.
4. அமீர் நூறூல் ஜென்னா (2019.06.23) செந்நெல் கிராமம் 01 சம்மாந்துறை
5. முகம்மது இர்பான் (2019.06.23) மூங்கிலடி வீதி சம்மாந்துறை.
6. முஹம்மது அலியார் பழீல் (2019.06.23) மல் 2:1 சம்மாந்துறை